மில்க்வைற் செய்தி
Milk White News

தபாற்பெட்டி இல. 77, யாழ்ப்பாணம். தொலைபேசி; 23233

கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் ★ புரட்டாதி 1990 ★ இதழ் - 177

# நிலம் சுரக்கும் நிதியம் கணக்கில்லை



**அன்னை பூமி எம்மீது அருள் சுரந்து உதவிக் கொண்டிருக்கும் செல்வத்துக்கு அளவில்லை. ஒன்று விதைக்க ஓராயிரமாகத் தந்துகொண்டிருப்பவள் அன்னை பூமி. ஒரு நெல் முளைத்து ஓராயிரம் நெல் தருகிறது. இங்ஙனமே தானியங்கள் யாவும் ஒன்று விதைக்க ஓராயிரமாக விளைவு தருவன.**

தமிழ்நாட்டு வானொலி பகலிரவாகப் பசுமைப் புரட்சிக்கு வழிகூறுகின்றது. அதைக்கேட்டு நாமும் செய்வன செய்தல் வேண்டும். உளுந்து, பயறு, சோயா முதலியனவும்; உருளைக்கிழங்கு வெங்காயம், மரவள்ளி முதலியனவும் நம்மை வாழவைப்பன.


ஒருமுறை பஞ்சகாலத்தில் ஒரு பனம் பழத்துக்காக இரு குடும்பத்தார் கத்தி, கோடரி, உலக்கை தூக்கிப் போரிட்டனர். இன்று பனம்பழம் காலமறிந்து விழுகிறது. நன்றாகப் பயன் படுத்துதல் வேண்டும். பனங்களியை உடனுண்டும், பனாட்டாக்கியும் கொள்ளலாம்தானே. பனாட்டு நல்ல உணவு என்பதை நாம் சொல்லத் தேவையில்லை.

முன்னர் உங்கள் பிள்ளைகள் தங்கள் பிஞ்சுக் கைநோகப் பொறுக்கித் தந்த பனம் விதைகளை மில்க்வைற் நிறுவனம் நாடெங்கும் ஆயிரம் ஆயிரமாக நாட்டிப் பனையபிவிருத்தி செய்தமை மறக்கமுடியாத வரலாறு. அவை இன்று பயன் தருகின்றன என்றால் அது உங்கள் முயற்சியேதான்.

★ பனையை வளர்ப்போம் - பயனைப் பெறுவோம் ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்



## சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம்

### திருவொற்றியூர்

பண் - தக்கேசி

திருச்சிற்றம்பலம்

**கங்கை தங்கிய சடையுடைக் கரும்பே**
**கட்டி யேபலர்க் குங்களை கண்ணே**
**அங்கை நெல்லியின் பழத்திடை யமுதே**
**அத்த என்னிடர் ஆர்க்கெடுத் துரைக்கேன்**
**சங்கும் இப்பியுஞ் சஞ்சல முரல**
**வயிரம் முத்தொடு பொன்மணி வரன்றி**
**ஓங்கு மாகடல் ஓதம்வந் துலவும்**
**ஒற்றி யூரெனும் ஊருறை வானே.**

திருச்சிற்றம்பலம்

சடா முடியிலே கங்கையைத் தரித்த கடவுளே, கரும்புபோன்று இனிமையானவரே, கருப்பங் கட்டியே, உள்ளங்கையில் எடுத்த நெல்லிக்காய்போல் காட்சிதரும் அமுதமானவரே, இனியரே, எல்லோருக்கும் பற்றுக் கோடாய், அவர்கள் தாவிப் படர்வதற்கு ஏற்ற கொழு கொம்பாய் உள்ளவரே; சங்குகள், சிப்பிகள், சஞ்சலம் என்னும் பெரிய சங்கு எல்லாம் சப்திக்கவும்; வயிரம், முத்து, மணிகள் எல்லாவற்றையும் வாரிக்கொண்டு எழுந்து வீசும் அலைகள் மோதுகின்ற திருவொற்றி யூரில் எழுந்தருளியுள்ளவரே, தேவரீரே எனக்குத் துன்பஞ்செய்தால், நான் வேறு யாரிடம் சென்று முறையிடுவேன்?



## நல்குரவு

(நுகரத்தக்க பொருள்கள் யாவும் இல்லாமை)

நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள் யாதொன்றும் கண்பாடு அரிது.

**மந்திரம், மருந்துகளால் நெருப்பின் நடுவே உறங்கவும் கூடும்; ஆனால் வறுமையுள் எவ்வகையானும் தூங்க முடியாது.**

## Poverty

Even in the midst of fire, sleep may be possible; in the midst of went there is no sleep.

## கோயில் வழிபாடு

கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம். ஆலயம் தொழுவது சாலவும் நன்று. நாம் கோயிலுக்குப் போய்க் கும்பிட்டு இறைவனிடம் எம்குறைகளைச் சொல்லி அழுது, அவர் எமக்குச் செய்த உதவிக்கு நன்றி சொல்லி ஆனந்தக் கூத்தாடி வருதல் ஒரு புறமாக நடைபெறுவன.

''வெளியில் கூட்டமாக நில்லாதேயுங்கள். தயவு செய்து உள்ளே வாருங்கள்'' என்று ஆசார நியதிகளையும் தவிர்த்து அழைத்துப் பாதுகாப்பாக இருங்கள் என்று இருத்துவதற்கு அபயக்குரல் ஒலிபரப்பியில் அழைத்ததே! ஆயிரக்கணக்கானோர் நெருக்கமாக நின்று அப்பனே முருகா என்றார்களே!

அந்த முருகன் யார்? தேவசேனாதிபதி ஆசுனும் அவுணவெள்ளம் ஐம்பதும் முடித்த வீரவாகு என்னும் தளபதியின் தலைவன். நல்லவர்களைக் காத்த முருகன் நமக்காக நல்லூரில் எழுந்தருளியுள்ளான். அவனை நம்புங்கள். அவனை முருகா! முருகா! என உபாசனை செய்யுங்கள் காக்கக் கடமை பூண்ட கந்தன் காத்தருள் புரிவான். அவன் நன்கடம்பன். கடம்பன் காப்பான், கவலை வேண்டாம். கண்ணீர் விடவேண்டாம்.

## கொட்டும் முரசு

இத்தாற் சகல அன்பர்களுக்கும் ஓர் அபிமான வேண்டுகோள். இன்று நாம் சேதமடைபோன தென்னைகளையும் பயன் தரும் தென்னைகளையும் பெருமளவில் தறித்துப் பதுங்கு குழிகள் அமைக்கிறோம். எமக்கு நல்லூரான் திருவருளால் ஒருகுறையும் உண்டாகாது. காலத்துக்குக் காலம் பலசோதனைகள் வந்து போகலாம். இன்று நாம் தறிக்கும் ஒவ்வொரு தென்னை மரத்தடியிலும் தவறாமல் கட்டாயமாக இரு தென்னம்பிள்ளைகளை உடனடியாக நடுதல் நல்லது. இன்று விரைவிற் காய்ப்பனவும் நன்றாகக் காய்ப்பனவுமான இனங்கள் உண்டு. தென்னைவளம் உள்ளவர்கள் தயவுசெய்து நெத்தல் காய்களைப் பிறருக்கு கொடுத்துதவுவார்களாக.

கிணறுகள் வற்றுகின்றன என்பது தெரிந்ததே. அயலில் உள்ள குளங்கள் வரண்டு போவதாலேயே கிணறுகளும் வற்றுகின்றன. பொது நன்மை கருதிக் குளங்களை ஆழமாக்குவோமாக.

பிள்ளைகள் விளையாட்டாக வீட்டுத்தோட்டம் செய்வதன் பயன் கைமேல் கிடைத்துள்ளது என்று பெற்றோர் பலர் பாராட்டுத் தெரிவித்து நன்றி கூறுகிறார்கள். மில்க்வைற் தொழிலகத்து நாற்றுமேடைகள் வீட்டுத் தோட்டப்பயிர்களை உங்களுக்காக முளைகளை உண்டாக்குகின்றன.

★ **நாம் செய்யும் நற்செயல்களே நம்முடன் வருகின்றன** ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லோரும் விரும்பும் எலுமிச்சம்பழம்

என்றும் கிடைக்கும் மங்கலகரமான எலுமிச்சம்பழம் எங்கள் வரண்ட பகுதிக்கு ஒருவரப்பிரசாதம். வீட்டு வளவில் ஒடுங்கிய ஒரு சிறிய இடத்தில் அதனை நாம் பயிராக்குதல் தலையாய கடன். எலுமிச்சம்பழம் எமது கட்டாய தேவை. பழப்புளி என்னும் புளியம்பழத்திலும் பார்க்க எலுமிச்சம்பழம் உடம்புக்கு நல்லது. உதவியானது, உற்சாகம் தருவது. அதில் கல்சியம் என்னும் ஒரு வகைச் சுண்ணும்புச்சத்து இருப்பதால் பற்கள், எலும்புகள் வலுவடைகின்றன. எலுமிச்சம் பழத்தில் உயிர்ச் சத்து உண்டு.

சிறுநீர்ப்பையில் உண்டாகும் நோய்களை நீக்குவதோடு, சிறுநீர்க் கருவிகளைச் சுத்தஞ்செய்து, இரத்தத்தைத் தூய்மையாக்குகிறது. உடலும் மனமும் சோர்வடையாதிருப்பதற்குச் சர்க்கரையும் எலுமிச்சம்பழமும் கரைத்துப் பருகுதல் வழக்கம்.

தடிமன் உண்டானல் எலுமிச்சம்பழரசமும் தேனும் கலந்து பருகுவர். பித்தந்தெளிவிக்கும் சிறந்த மருந்து எலுமிச்சம்பழரசம். தொண்டை வரண்டால் வெந்நீரில் எலுமிச்சம்பழரசம் சேர்த்துப் பருகுவர். பல்வலி நீக்க வல்லதும், நரம்புத்தளர்ச்சி நீக்கவல்லதும் தாகம் தீர்க்க வல்லதும் எலுமிச்சம்பழரசமாகும். எலுமிச்சைக்குப் புளிவிசேடம் என்றும் பெயர்.

எலுமிச்சை பாலஸ்தீனம், இத்தாலி, ஸ்பெயின், சிசிலி, ரூடேசியா, கலிபோனியா, லிஸ்பன், அமெரிக்கா முதலிய நாடுகளிலும் நன்கு பயன் தருகிறது.

எலுமிச்சை பூத்து 120 நாள்களில் பழமாகி விடுகிறது. எலுமிச்சை பச்சைநிறமாயிருக்கும் போதே பயன் தருவது.

எலுமிச்சம் பழத்தில் புரதம், கொழுப்பு, சக்கரை, கல்சியம், பொஸ்பரசு, இரும்புச்சத்து என்பன யாவும் உண்டு. உமிழ்நீரைச் சுரக்கவைத்து உணவை சமிபாடாக்க வல்லது. எலுமிச்சம்பழம். உயிர்ச்சத்தில் A. B. C. உள்ளது. சிட்டிக் என்னும் அமிலமும் உள்ளது.

உணவு சமிபாடாவதோடு உடற் பருமனும் குறையும், வாய்நாற்றம் நீங்கும். முகப்பருக்கள் நீங்கும், தலைவலி தீரும், உடம்பில் சூட்டைத் தணிக்கும். ஊறுகாய் செய்து பலநாள்கள் பயன்படுத்துவார்கள். சர்பத் செய்தும் பயன் காண்பர். இன்று பழரசமே பக்குவமாகப் போத்தில்களில் அடைக்கப்பட்டு வருகிறது. தடித்த தோலுள்ள இனம் ஊறுகாய்க்கு நல்லது. மெல்லிய தோல் உள்ளது அதிக சாறுடையது.

எலுமிச்சைக்கு அம்பு, அரிசலம், இராசகனி, இலிகுசம் முகசோதி, சதாபலம், வாலயீகபலம் என்றும் பெயர்கள் உண்டு. தேசிக்காய்என்பது சிங்களம். எலுமிச்சம் பழத்தை அளவோடு பயன் செய்தல் வேண்டும். அளவுக்கு மிஞ்சினல் உடம்பில் சுண்ணும்புத்தன்மை நீறிப்போகும் பித்தம் அதிகரிக்கும் சமிபாடு குறையும். எலுமிச்சை இனத்தில் ஜம்பீரம், நிம்பூகம், மதுஜம் பீரம் என்னும் இனங்கள் நல்லவை என்று ஆயுர்வேத வைத்தியர் கூறுவர்.

எலுமிச்சையின் உபயோகம் அதிகம். அதன் இலையே உபயோகமானது. சில இலைகளைக் கொய்து கழுவி உலரவிட்டு உப்பு, மல்லி, பெருங்காயம் இட்டுப் பொடிபண்ணி உணவோடு தொட்டு உண்ணும் போது பசியைத் தூண்டி உருசியும் மணமும் நன்றுயிருக்கும்.

### பழத்தின் பலவித பயன்கள்


1. மலச்சிக்கல் நீங்கப் பழஞ்சோற்று நீருடன் பழரசமும் உப்பும் கலந்து பருகுதல்.
2. சமியாக்குணம் போக்க உப்பும் நீரும் கலந்து சில பழரசத்துளிவிட்டுப் பருகுதல்.
3. உடற்பருமன் குறைய நீரில் தேனுடன் பழரசம் கலந்து பருகுதல்.
4. முகப்பொலிவுபெறப் படிகாரத்தூளுடன் பழரசமிட்டு நீர் கலந்து காய்ச்சிப் பூசுதல்.
5. வாய் நாற்றம் போக்கவும் தொண்டை சுத்தமாவும் நீரிற் கலந்து கொப்பளித்தல்.

# எவ்வித கவலையும் வேண்டாம்

இலங்கையின் வடக்கும் கிழக்கும் பொருளாதார வளத்தில் நின்றுபிடிக்குமா என்று எவரும் எவ்வித கவலையும் கொள்ளத் தேவையில்லை. முயற்சி திருவினையாக்கும். மனம்வைத்தால் மண் வளம்தரும். கிளிநொச்சி மாவட்டத்தில் அக்கராயன் குளம் முதலாய இடங்களில் போதியளவு கரும்பு விளைவித்து. சீனி, சர்க்கரை செய்துகொள்ளலாம். கிளிநொச்சியில் தென்னை நன்றுகப் பயன்தரும். கிளிநொச்சிக்கு இப்பால் உப்பு விளைவுக்குப் போதிய வசதியுண்டு. உப்பை மூலப்பொருளாகக் கொண்டே பலவித உற்பத்திப் பொருள்கள் உருவாகின்றன தென்மராட்சிப் பகுதியிலும் அதற்குத் தெற்கிலும் அன்னுசி பலா நன்றுகப் பயன்தரும். இன்னும் மரமுந்திரி நன்றுக உண்டாகும். மன்னுர், வவுனியா, மட்டக்களப்பு போதியளவு நெல் தரும். முருங்கன், நெடுந்தீவு, ஆகிய இடங்களில் சீமெந்து செய்வதற்கான மூலப் பொருள்கள் நிரம்பவுண்டு. வடக்கில் பலவிடங்களிலும் மா நன்றுகப் பயன்தரும். யாழ்ப்பாணத்துமாம்பழம்நல்ல சுவையும் சத்தும் உள்ளது. யாழ்ப்பாணத்தில் பல பிரதேசங்களிலும் நன்றுகப் பயன்தரும் வாழை நிரந்தரமாகப் பயன்தரும். வாழையின் பலபாகங்கள் தொழில் வளத்துக்குப் போதிய மூலப்பொருள் தரும். வரண்ட பகுதிகளில் உண்டாகும் மிளகாய், கிழங்குவகைகள், காய்கறிவகைகள் வற்றலாக்கவும் ஏற்றுமதி செய்யவும் உகந்தவை. வடபகுதியில் எள்எண்ணெய் நிறையவுள்ளது. நல்லெண்ணெய் ஏற்றுமதிக்கும் உரியது. வடக்கிலும் கிழக்கிலும் உள்ள பனைவளம் வற்றுத வருவாய் தருவது. பனைப்பிரயோசனங்கள் நூற்றுக்கணக்கானவை ஏற்றுமதிக்குரியவை.

★ கடவுள் ஒருவரே நம்மைக் காப்பதற்கு உள்ளவர் ★

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## பக்தி

இறைவனிடம் முதிர்ந்த அன்பு, பரிசுத்தமான நேயம், பக்தியால் இறைவனை அடையலாம். யாகம், தானம், தவம், வேதாத்தியானம், புராணபடனம் முதலிய கருமங்கள் பக்தி சிரத்தை இல்லாதபோது பயனற்றுப் போகும். பக்தியுடையவர் பக்தர்கள். அவர்கள் மேலான நெறியில் ஒழுகுபவர்.

சாதுக்களின் சேர்க்கை, புராண சிரவணம், இறை குணங்களில் விருப்பம், இறை குணங்களை வருணித்தல், குருவை உபாசித்தல், பயன் கருதாத சேவை, மந்திரங்களை உபாசித்தல், பக்தரைப் பூசித்தல், சகல பூதங்களையும் (மண், நீர், தீ, காற்று, ஆகாயம்) ஈஸ்வர வடிவாகக் காணல், வெளி விவரங்களில் தலையிடாமை, தத்துவ விசாரணை முதலியன பக்தியின் வழி.

### சமயம்

*"Religion is the spiritual quality of life. It is the systamatic human effort to conserve and enhance social values. Self sacrifice, loyalty, obedience, patriotism and other social values, ethical inwardness count much."*

### கடவுள் கொள்கையில் குறியீடு

கடவுட் கொள்கையில் மிகப்பழைய குறியீடு சிவலிங்கம். உலகமெங்கும் பழைய சிவலிங்கங்கள் அகழ்வாராய்ச்சியால் வெளிவருகின்றன. நீள்நாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாம் சிவலிங்கம் என்பது சிவலிங்கத்தையேயாம். சிவலிங்கம் அருவமும் அல்ல உருவமுமல்ல. இது அருவுருவம்.

### The Concept of God is symbolical

*"A Flag is a symbol. Taken literally a national flag is only a bit of brightly but coloured bunting, but vast litracies of history and constitutional law only "imperfectly impress what the flag symbolises."*

பாரதப் பண்பாட்டு வரலாற்றில் கொடி துவஜம் பதாகை என்றெல்லாம் பேசப்பெறும். அது மன்னரின் மேலான மதிப்புக்குரியது. மன்னன் புகழ்பாடுவோர் முதலில் கொடிபாடி, பின்னர் தேர் பாடி அதன்பின் முடி முத்தாரம் முதனியன பாடுவர். கொடிக்கு இத்தனை சிறப்பாயின் உலகம் முழுவதையும் காட்டும் சிவலிங்கம் என்னாகும்!

## Words with opposite meanings

1. Adversity — prosperity
2. confident — diffident
3. miserly — generous
4. predessor — successor
5. trusting — suspicious
6. attract — repel
7. ignorance — enlightenment
8. opaque — transparent
9. sukly — healthy
10. natural — artificial

## Brief definitions

1. sculptor 2. flour 3. radiator 4. optimism 5. catalogue.

1. One who carves stone so as to create a statue or other work of art.
2. A finely - crushed powder of wheat or other grams.
3. An apparatus for transmitting waves of energy in all directions.
4. The cheerful assumption that everything will turn out well.
5. A systematically - arranged list of articles of easy reference.




## இமயசோதி

இமயசோதி என்று எத்திசையும் புகழ் மணக்க இந்திய சிந்தனைகளை மேற்கு நாட்டவரும் மேற்கொள்ள வைத்த சிந்தனையாளர் வரிசையில் அண்மையில் எம்மிடையே வாழ்ந்து எம்மைத் தியானஞ்செய்யவும், சிந்தனை செய்யவும் நல்லதையே பேசவும் நல்லதையே செய்யவும் பழக்கியவர் சிவானந்த மகரிஷி. அவரைத் தினந்தோறும் நினைக்கவேண்டும். அதனால் எங்கள் வாழ்வு சிறக்கும். சிந்தனை குவியும். நல்லுள்ளம் உண்டாகும். அவரின் நினைவு 8-9-90 சனிக்கிழமை வருகிறது.

★ காமம் கோபம் உடல் முழுவதையும் பாதிக்கின்றன ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அறிந்துகொள்ளுங்கள்

## 1. நூறுண்டு வாழலாமாம்

வேதம் நூறுண்டு வாழுமாறு பாடியபோதிலும் பாதியும் உறங்கிப்போகும் என்று தமிழ்ப் பாவலர் பாடினர். இன்றைய ரஷ்ய விஞ்ஞானிகள் இருபத்தோராம் நூற்றுண்டு மக்கள் நூறுண்டு வாழ்வார்கள் என்று பல்லாண்டு பாடுகிறுர்கள்,

## 2. நொபல் பரிசு

பௌதிகம், இரசாயனம், அங்காதிபாதம், வைத்தியம், இலக்கியம், பொருளாதாரம், விஞ்ஞானம், சமாதானம் என்னும் துறைகளில் மேம்பட உழைத்துப் புதியன கண்டு, விருந்தென விடுத்த விவேகிகளுக்குப் பரிசாகப் பெருந்தொகை பணமும் விருதும் கிடைத்தல் வழக்கம். இத்தகைய பரிசுகள் 1901 முதலாக வழங்கப் பெறுவது இருபதாம் நூற்றுண்டுக்கு ஒரு வரலாற்றுப் பெருமை. சமாதானத்துக்கான பரிசு அண்மையில் ஆரம்பித்ததாகலாம். அது நோர்வே நாட்டு ஒஸ்லோ நகரில் வழங்கப்பெறுவது. ஏனைய பரிசுகள் சுவீடின் நாட்டு ஸ்ரொக்ஹோம் நகரில் கிடைப்பன. இத்தகைய பரிசுகளுக்கான பெருமளவு மூலநிதியை சுவீடின் நாட்டு அல்பிரட் நொபல் விட்டுச் சென்றுர். பரிசுத் தொகை முந்திய மதிப்பில் 5,00000 ரூபா அளவிலானது. இன்றைய மதிப்பு இன்னும் அதிகமாகும்.

## 3. பேசாமடந்தை

பெண்கள் அதிகமாக கலகலப்பாக பேசுதல் வழக்கமாம். ஒருமுறை விவேகசக்கரத்தில் ஒரு வினு ஒலித்தது. பெண்கள் குறைவாகப் பேசுதல் எப்போது? விடைகள் பலவிதமாக வந்தன. மனவருத்தம், மகப்பேற்றுக்காலம், வறுமைக்காலம் என்றெல்லாம் விடை எழுதினுர்கள். விவேகி ஒருவர் சொன்ன விடை 'பெப்ருவரி மாதத்தில்' என்பதாகும். இதன் கருத்து நாள்கள் குறைந்த மாதம் என்பதாலாகும்.

ஒரு சைவத் தமிழ்க் கன்னிப் பெண் கலகலப்பாகப் பேசிவந்தாள். தாய் தந்தையர் திருமண நாளின் காலையில் அவளிடம் ''பிள்ளை இன்றைக்காவது பேசாமல் இரு'' என்று வேண்டிக்கொண்டார்களாம். அவளும் இணங்கினுளாம். மணவறையில் குனிந்தவாறு மௌனமாக இருந்தவளால் மௌனஞ் சாதிக்கமுடியவில்லை. காரணம் திருமணம் நடத்திய குருக்கள் செய்த தவறு.

பெண் வாயைத் திறந்தாள்.

''ஈச்சம் முள்ளால் இறுகக் குத்தினுலும் என்னுடைய வாய் கிடவாது. ஐயா தேங்காய்க்கு மஞ்சள் பூச மறந்துவிட்டார்'' என்றுளாம். அவள் பேசட்டும்.

பேசாமடந்தை ஒருத்தி பிரான்ஸ் நாட்டுப் புகழ் பெற்ற சட்டத்தரணியின் மனைவி, மடம் றெஜினி என்பவர் ஒருநாள் கணவன் மனைவியிடம் ''சும்பா அலம் பாதே'' என்று கூறினுராம். நற்பெண்டாட்டிக்கு ஒரு வார்த்தை என்பர். போதும் நல்ல தண்டனையாயிற்று. அப்பெண் 1842 முதல் 1872 இல் இறக்கும்வரை ஒரு வார்த்தை பேசியதே இல்லையாம்.


# பிறநாட்டவர் இப்படியும் சொன்னுர்கள்

1. நாம் பிறருக்குச் செய்யும் உதவிதான்நாம் பூமியில் வாழ்வதற்குக் கொடுக்கும் வாடகை.
2. உன்னைக் கொண்டு நடத்தத் தலையையும், பிறரைக் கொண்டு நடத்த இதயத்தையும் உபயோகித்துக் கொள்.
3. இளமை பூக்குங் காலமாயின் முதுமை கனியுங் காலமாகும்.
4. கடன்கொடுப்பதால் நண்பர்களை இழக்க நேரிடும்.
5. மக்களுக்குச் சேவை செய்தலே கடவுள் வழிபாடாகும்.
6. யுத்தங்கள் களங்களில் தொடங்குவதில்லை, மனித மனத்திலேயே தொடங்குவன.
7. தேகசுகமே முதற்பெருஞ் செல்வம்.
8. மனிதனுே பெண்ணுே கெடுவதன் காரணம் நாவேதான்.
9. வறுமை என்னும் பாடசாலையில் சிட்டாசாரம் பழகலாம்.
10. கோபத்தைத் தணிப்பதற்கு நல்லவழி மௌனமேயாகும்.
11. தன்னை மாணுக்கனுகக் கருதாதவன் எதையும் படிக்கமாட்டான்.
12. உபயோகமற்றவர் என எவரும் உலகிலில்லை.
13. என்றும் விழாமல் இருப்பதிற் பார்க்க விழுந்தால் எழுதலே பெருமையுடையது.
14. வாழ்க்கை என்பது கடமைகள் நிறைந்தது.
15. உதயத்தின் முன் அதிக இருளாயிருக்கும்.
16. இழக்க முடியுமானதை இரவல் கொடு.
17. இருவர் ஒரு காரியத்தில் இறங்கினுல், ஒருவர்தான் சிந்தித்தார் என அறியலாம்.
18. சச்சரவு, சச்சரவு கொடுத்தாலல்லது சச்சரவை நீளையாதே,



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அவனும் அவளும்



"வள்ளுவர்"

அவனும் அவளும் என்பது அவனுக்கு அவள் என்றும் அவளுக்கு அவன் என்றும் ஒருவனும் ஒருத்தி என்றும் ஒரு நியதியாய்விட்டது. அது எப்பவோ முடிந்த உண்மை. அந்த உள்பொருளாய தத்துவம், காலதத்துவத்தையும் கடந்து நிலவிவருகிறது. அது உலகத்தோடொத்ததாய் விட்டது. பெண்ணை ஒதுக்கிவாழ்ந்த முனிவர்களும் அவளை ஆயிளாய், சேயிளாய், நேரிளாய் என்று வழங்கும் வழக்கத்தை நீட்டியே வந்துள்ளார்கள்.

கோழி கூவித்தான் ஆதவன் உதிப்பதில்லை. ஆம்பல் மலர்ந்துதான் திங்கள் உதிப்பதில்லை. எவரும் சொல்லித்தான் காதல் உதிப்பதில்லை. காதல் உதிப்பதும் ஒரு நியதி. அதைத் தடைசெய்யவோ கட்டுப்படுத்தவோ எவராலும் முடியாது. தானே தோன்றி, தானே வளரும் காதல் இயற்கையானது, புனிதமானது, தெய்விகமானது.

அவளுக்கு மலராலான உடலும் மயிலாலான சாயலும், அன்னத்தாலான நடையும், யாழாலான குரலும் கொடுத்தவர் இறைவனேதான். அந்த இறைவன் தான் அவளுக்கு ஏற்ற அவனையும் அவளண்டையில் கொண்டு வந்து நிறுத்தினர். அவனும் அவளைக் கண்டு வியந்து ஆவட்டம் சோவட்டம் போட்டானும் என்பது நாட்டார் வழக்கு.

அவனும் எத்தனையோ புலிகளையும் யானைகளையும் புறங்கண்டவன். எத்தனையோ வீரர்களைத் தனிநின்று வென்றவன் இங்கே மானுலாய விழியுடையாளின் கடைக்கண்ணை வெல்ல முடியாமல் தப்பிப்போக முடியாமல் தடுமாறி நின்றான். ஆடவர் எவர்தாமும் அவளைக் கண்டால் கண்ணை மீட்டு காலைத்திருப்பி வைத்து அகல முடியாது. அவளைக் கண்டபின் அகறலுமுண்டோ என்று மணிமேகலை பாடிய சாத்தனுராய முனிவரே பாடுகிறார் என்றால் காதற்கவிபாடும் கட்டிளம் புலவர்கள் என் செய்வர்.

இறைவன் படைத்தவற்றுள் பல அவளிடம் அமைந்து விட்டன. மேகம், மலை, சந்திரன், சந்தனம், மான், மயில், அன்னம், முத்து இன்னும் எத்தனையோ அவளிடம் புகலடைந்துள்ளன. அவளை அணுகும்போது அரைக்காமலே சந்தனம் கமழ்கின்றது. நட்சத்திரங்கள் கண் சிமிட்டுகின்றன. சந்திரன் மேகத்தை ஒதுக்கி ஒலிகாலுகின்றது. முத்துக்கள் ஆழ்கடலை விட்டு வாயிழ்விரிப்பில் நிரைப்படுகின்றன.

அவனையும் அவளையும் அறிவதற்குச் சங்ககாலத்துக்கு போகவேண்டாம். காதல் சங்ககாலப்புலவர்களின் ஏக போக உரிமை அல்ல. அண்மைக்காலத்தில் முஸ்லீம் புலவர் ஒருவர் தமிழ்மயமாகி தமிழனுகி தமிழிச்சியைக் கண்டு பாடுகிறார். திருவையாற்று அப்துல்கரீம் அவள் சிரிப்பைத்தான் கண்டார். கண்டதும் கொண்டதுளக் காதல் பீறிட்டு வந்தது.

"முல்லை அவள் சிரிப்பு, முகமோ மலர் விரிப்பு, வில்லை நுதல் இணைக்கும் விழியை இமை இணைக்கும்."

இனி அவளின் அழகைப் பருகுவதற்குத் தன் கண்களை அகலவிரித்த அவன் அவளின் மார்புகள் கும்பங்கள் போன்று குவிந்தும் ஒன்றுக்கொன்று இடைவெளி தெரியாமல் நெருங்கியும் இடையில் ஈர்க்குத்தானும் புகமுடியாத அளவில் இணைந்தும் இருந்தமையை ஈர்க்கிடை போகா இளமுலை எனப் புகழ்ந்தான்.

அவன் அவளுடைய மாரபகத்தைப் பார்த்து மகிழ்ந்த போது, அவளும் கடைக்கண்ணால் அவனுடைய மார்பகத்தைப் பருகுவாள் போலப் பார்த்து மகிழ்ந்தாள். அதுவுந்தான் கடல்போலப் பரந்தும், மலைபோல உயர்ந்தும், சந்தனங்கமழும் தன்மையானதாக இருந்தது. அவன் எவர்களையும் தனித்து நின்று வெல்லக்கூடியவீரன் என்பதை மார்பகலம் காட்டியது. அதுவும் இரண்டரை அடி அகலமுள்ளதாயிருந்தது.

இனி அவனுடைய வயிற்றைச் சிறிதளவு பார்த்தாள். அது இரண்டு மடிப்புள்ளதாய், அழகாய் தொந்திபடாத தாயிருந்தது. அவனும் அவளுடைய வயிற்றைச் சிறிதளவு பார்த்தான். ஆகா என்ன அழகு. மேலே சிறுத்துக் கீழே கனத்து, உரோமம் இல்லாத அமைவில் சில மடிப்புகளோடு மலர்ந்து இருந்தது. அவள் பருவமுற்றவள் என்பது தெளிவாகத் தெரிந்தது. ஆனால் அவள் முகத்தில் அமைதி, அழகு தவழத் தவழ அவளிடம் காமவுணர்ச்சியோ, வேட்கை மிகுதியோ வேணவா மிகுந்தோ காணப்படவில்லை. சாந்தம் நிலவிய முகத்தில் நாணம் பிரதிபலித்தது.

அவன் அவளைப் பார்த்த பார்வை தன்னை அவளுக்குத் தத்தம் செய்வதாக இருந்தது. அவளும் நாணிக் கோணிப் பார்த்த கள்ளப் பார்வை, கடைக்கண் பார்வை தான் அவனுக்கே உரியவள் எனக் காட்டியது.

---

## செய்தி வாழ்க

1. மேல் - உடைத் தூய்மையோடும்
 மிகுமனத் தூய்மைசெய்ய
நால் வகைச் செய்தியோடும்
 நம்மிடம் வருகைசெய்யும்
பால் வெள்ளைச் செய்தித்தாளைப்
 படிக்கலாம்! படிக்கும்நெஞ்சும்
பால்நிறம் பெறுமே! பெற்றால்
 பணியெலாம் தூய்மைதானே!

2. அகராதி - நிகண்டைப் போலும்
 அபிமான - மணியைப் போலும்
தகவான குறளைப் போலும்
 தமிழ்க் க. சி. குலத்தார் போலும்
மிகுதர்ம வள்ளல் போலும்
 மீன்முட்டை ஆலைப்போலும்
சுகமீயும் 'நீம்சோப்' போலும்
 தொடர் வெள்ளைச் செய்தி வாழ்க!

இரா. தமிழரசி
ஈச்சந்தீவு,
கிண்ணியா.

---

★ பிறர் குற்றங்களை வெளியாகக் கண்டித்தலாகாது ★

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




## அம்பாலிகை

காசிராசாவின் கடைசிக் குமாரத்தியாய பெண்ணின் பெயர் அம்பாலிகை. அரண்மனையில் நடைபெற்ற சுயம் வர விழாவில் வெற்றியீட்டிய வீடுமர், அம்பாலிகையைத் தன் தம்பி விசித்திரவீரியனுக்குத் திருமணஞ் செய்து வைத்தார்.

விசித்திரவீரியன் இறந்தமையால் பெரியவர்கள் அம்பாலிகையை வியாசபகவானிடம் சேர்த்தபோது அம்பாலிகை வியாசபகவானின் கருமையையும் பார்வை யையுங்கண்டு கலங்கி உடம்பு வெளுறினமையால் அவள் பெற்றபிள்ளை வெண்மை நிறமுள்ள பாண்டு நோயி னனாகப்பிறந்தான்.

பாண்டு மன்னன் குந்தி, மாத்திரி என்னும் பெண் கள் இருவரை மணந்து குந்தியிடம் தருமர், வீமன், அருச்சுணன் என்னும் வீரர் மூவரையும், மாத்திரியிடம் நகுலன், சகாதேவன் என்னும் இருவரையும் பெற்றுப் பஞ்சபாண்டவர்களுக்குத் தந்தையாயினன்.

கண்பார்வையற்ற தமையனை திருதராட்டினனுக் காகத் தம்பியாய பாண்டுவே அரசகாரியங்கள் பார்த்து வந்தான். இந்த அமைப்பினுலேதான், பாண்டு இறந்த பின் இராச்சியத்தில் பிரிவினை, பிளவு உண்டாகிப் பதி னெட்டு நாட்கள் கடும்போர் நிகழ்ந்தது.

## நல்ல காலம் பிறக்கப்போகிறது

எமக்கு நல்ல காலம் பிறக்கப்போகிறது. இதைச் சொல்வதற்குக் குடுகுடுப்பைக்காரனோ, குறத்தியோ தேவையில்லை. புராணங்கள் படித்தவர்கள் துன்ப இன்பங்களை நன்கறிவார்கள். அவுணர்கள் அரக்கர்கள் அசுரர்கள் இருளர்கள் என்றெல்லாம் முன்னர் வாழ்ந்த வர்கள் நல்லவர்களுக்குத் தீமைசெய்து ஓய்ந்து ஒழிந்து போனவர்கள்.

நாங்கள் பிறர் எவரையும் நொந்து பயனில்லை. நாங் கள் அனுபவித்தே ஆகவேண்டும் என்பது நியதி. தத்து வம் காலதத்துவம் கண்டவை. அண்மைக்காலத்தில் யூதர் இனம் பட்டதுன்பமும், அதற்குமுன் ஹிற்றையிற் சாதி யினர் பட்டதுன்பமும் வரலாறு கண்டவை. இராமர் தருமர், நளன், அரிச்சந்திரன் பட்டபாடுகளை நாம் எண் ணிப் பார்த்தல் வேண்டும்.

நாங்கள் எங்கள் குறையைச் சொல்லி, ஆறுதல் பெறப் பெரியவர்கள் இல்லை. எங்களை வருத்துபவர்கள் ஞானோதயம் பெற்றுத்தாமே தாம் செய்வனவுக்கு வருந்தி பச்சாத்தாபப்படுவார்கள். பச்சாத்தாபத்தைவிடக் கடு மையான தண்டனை இல்லை. *(Repentance is the highest form of punishment)*

## சித்த வைத்தியத்திற் குழூக்குறி

| | | | |
|---|---|---|---|
| 321. | இலாஞ்சி | — | ஏலம் |
| 322. | இலாடம் | — | புளி |
| 323. | இலிகுசம் | — | எலுமிச்சை |
| 324. | இறை | — | மாமரம் |
| 325. | இருளி | — | கருஞ்சீரகம் |
| 326. | இரேசகி | — | கடுக்காய் |
| 327. | இலகம் | — | ஊமத்தை |
| 328. | இலகு | — | அகில் |
| 329. | இலகுரம் | — | ஈரப்பலா |
| 330. | ஈங்கம் | — | சந்தனம் |
| 331. | ஈங்கை | — | திப்பிலி |
| 332. | ஈஸ்வரவிந்து | — | இரசம் |
| 333. | ஈஸ்வரிபிந்து | — | கெந்தகம் |
| 334. | ஈமம் | — | பாதிரிமரம் |
| 335. | ஈமவாரி | — | வசம்பு |
| 336. | ஈயகுலவி | — | நீலப்பாஷாணம் |
| 337. | ஈர் | — | கரும்பு |
| 338. | ஈழத்தலரி | — | பொன்னலரி |
| 339. | ஈழம் | — | கள் |
| 340. | ஈனத்தார் | — | கொன்றை |
| 341. | உலுவம் | — | வெந்தயம் |
| 342. | உலுவா | — | பெருஞ்சீரகம் |
| 343. | உலூகலம் | — | குங்குலியம் |
| 344. | உலோசிதம் | — | சந்தனம் |
| 345, | உருவாரம் | — | வெள்ளரி |
| 346. | உருளரிசி | — | கொத்தமல்லி |
| 347. | உரோசனி | — | கடுகு |
| 348. | உலகுலம் | — | திப்பிலி |
| 349. | உலிமணி | — | நாயுருவி |
| 350. | ஊகடன் | — | முருங்கை |
| 351. | ஊகம் | — | ஊமத்தை |
| 352. | உரண்டினர் | — | கள்ளி |
| 353. | ஊரூடம் | — | முருங்கை |
| 354. | ஊர்ப்பலம் | — | ஆமணக்கு |
| 355. | ஓசிதம் | — | கற்றாழை |
| 356. | ஓமை | — | மாமரம் |
| 357. | ஓடுங்கி | — | ஆமை |
| 358. | ஓங்கல் | — | மூங்கில் |
| 359. | ஓசை | — | வாழை |
| 360. | ஓதிமம் | — | புளியமரம் |

★ என்றும் எம்மைப் பிரியாதவர்களே உத்தம நண்பர்கள் ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்னை மரம்

ஆங்கிலேயர் இலங்கைக் கரைநாடுகளை ஒல்லாந்தரிடமிருந்து கையாடியபின் முதலில் பழக்கத்துக்கு விட்ட செம்புக்காசில், யானைமுத்திரை பொறித்தார்கள். விரைவில் அதனை விடுத்துத் தென்னை மரத்தையே பொறித்தார்கள். தென்னை பொருளாதாரப்பயிர் என்று கண்டு அதன் பிரயோசனங்களை ஏற்றுமதிசெய்து பொருளீட்டினார்கள்.

தேங்காயின் பிரயோசனம், கொப்பறாவின் பயன் சிரட்டையின் பெறுமதி, தும்பின் பெறுமதி எல்லாம் கண்டார்கள். தென்னை வெள்ளைக்காரரோடு கூடிப்பிறக்கவில்லை. அது எங்களோடுதான் கூடிப்பிறந்தது, பிறக்கிறது. நாம் தென்னையை அதிகம் பொருட்படுத்தவில்லை. தென்னிலங்கையர் தென்னையில் என்னவென்ன செய்கிறார்கள் என்பதை அறிவோம். காலியிலிருந்து கயிறும் மொறட்டுவாவிலிருந்து விளக்குமாறும் தும்புத்தடியும் வரவேண்டும் என்ற நியதிக்குக் கட்டுப்பட்ட எங்கள் பெண்கள், குனிந்து கூட்டினால் நாரி நோகுது என்கிறார்கள். தென்னோலை விழுந்ததும் நாய் ஓடிச்சென்று புரண்டு விளையாடுகிறது. ஓர் ஓலையின் ஈர்க்கும் ஒரு பூவரசந் தடியும் ஒரு தடிவிளக்குமாறுவது தெரிந்ததே. பொச்சு மட்டை இன்று புகைந்து கரியாகிறது. ஏன் கயிறாக மாட்டேன் என்று சொன்னதோ? கொழும்புத்துறைப் பெண்கள் நல்ல கயிறு செய்கிறார்களே.

## இலுப்பை விதை

நெட்டிலை இலுப்பை என்று சங்ககாலப்புலவர் பாடிய எங்கள் மரம் எங்கள் சுற்றாடலுக்குரிய மரம், இன்று பழுத்துச் சொரிந்தாலும், பொறுக்குவாரைக் காணோம். அநுராதபுரத்துக்கப்பால் கெக்கிறாவையிலிருந்து மூடை மூடையாக ஏற்றுமதியாகும் இலுப்பை விதை பிள்ளைகள் கையால் பொறுக்கிக் குவித்தவை தாமே. எங்கள் பிள்ளைகள் முன்னர் கோடுகீறி இலுப்பைக் கொட்டை அடித்தமை இன்றுள்ளவர்கள் மறந்து போனார்கள். பெரிய கரிய விதை ''கருங்காலி உச்சான்'' எனப் புகழ் பெற்றது.

இலுப்பை மரத்தைப் பழைய குளிர்சாதனப் பொறி என்றும் அது முத்துப்போன்ற பூக்கள் சொரிவது என்றும் மு. கந்தையாப் பண்டிதர் வல்லிபுரமாயவன் பிள்ளைத் தமிழில் பாடுவர்.

இலுப்பை விதை எண்ணெய் நிறைந்தது. தேங்காய் நெய் விலையேறினாலும் விளக்கெரிக்கப் பொரித்துச்சமைக்க உதவுவது இலுப்பெண்ணெய். பனங்காய்ப் பணியாரஞ் சுடுவதற்கு இலுப்பெண்ணெய் வாய்ப்பானது. உரோமர் கிரேக்கர் இலுப்பை இனத்து ஒலிவ் நெய்யை உண்ணவும் பூசிக்குளிக்கவும், விளக்கெரிக்கவும் விதம்விதமாக பயன் படுத்தினர். ஒலிவ் அவர்களுக்குத் தேசியமரம் எமக்குத் தேசியமில்லையா? மரமில்லையா? உணவில்லையா? உடையில்லையா? பறங்கி நாகரிகம் எமக்குப் பழக்கமாய் விட்டதா? அதைக் கைவிடமாட்டோமா? இலுப்பை விதையைக் குனிந்து பொறுக்கமாட்டோமா?

**Substituting Opposite words without changing the sentences.**

1. The temperature of the room caused the wax to **solidify**.
2. Grapes are **scarce** this year.
3. Vavuniya is **roughly** fifty miles away.
4. The Medicine **alleviated** his illness.
5. After a few days the friends became **reconceiled**.
6. The Tamil Language is rich in **antonyms**

1. The temperature of the room caused the wax to **melt**.
2. Grapes are **common** this year.
3. Vavuniya is **exactly** fifty miles away.
4. The medicine **aggravated** his illness.
5. After a few days the friends became **estranged**.
6. The Tamil Language is rich in **synonyms**.

NEEMIA
FERTILISER



நீமியா உரம்

A MILKWHITE PRODUCT

நெற்பயிர், வாழை, தோட்டப்பயிர்,
செழித்து வளரவும்
சிறந்த விளைச்சலைத் தரவும்
அடி உரமாகப் பாவியுங்கள்
நீமியா உரத்தினை.
இது ஒரு சிறந்த பூச்சிக்கொல்லி கூட.
இது ஒரு மில்க்வைற் தயாரிப்பு.

யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவர் திரு. தி. நாகரத்தினம். யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிடுபவர் '[illegible]'' க. கனகராசா ஜே. பி. அவர்கள்
கௌரவ ஆசிரியர்: திரு. க. சி குலரத்தினம் 1-9-90

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org